RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 78 | மார்ச்.27 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# தமிழ்நாட்டில் ஏழு முனைப் போட்டியா?

சென்னை, மார்ச்.27-

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் கடந்த முறை ஐந்து முனைப் போட்டி நிலவிய நிலையில், தற்போது ஏழு முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வருகின்ற ஏப்ரல் 23 ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெறவுள்ளது. வருகின்ற திங்கள்கிழமை (மார்ச் 30) முதல் வேட்புமனுத் தாக்கல் தொடங்கவுள்ளன.

கடந்த 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி, அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி, அமமுக தலைமையிலான கூட்டணி, மக்கள் நீதி மய்யம் தலைமையிலான கூட்டணி மற்றும் நாம் தமிழர் கட்சி என ஐந்து முனைப் போட்டி ஏற்பட்டது.

இவற்றில், திமுக மற்றும் அதிமுக தலைமையிலான கூட்டணியைத் தவிர மற்ற மூவரும் ஒரு இடங்களில்கூட வெற்றி பெறவில்லை.

மேலும், திமுக கூட்டணி 45.38%, அதிமுக கூட்டணி 39.71%, நாம் தமிழர் கட்சி 6.58%, அமமுக கூட்டணி 2.85%, மநீம கூட்டணி 2.73% வாக்குகள் பெற்றன.

பிற கூட்டணியின் ஆதரவின்றி தனிப் பெரும்பான்மையுடன் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி ஆட்சி அமைத்தது.

இந்த நிலையில், 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக, அதிமுக கூட்டணியில் இடம்பெறப் போகும் கட்சிகள் என்னென்ன?, தவெக ஏதேனும் கூட்டணியில் இணையுமா? அல்லது புதிய கூட்டணியை உருவாக்குமா?, தேமுதிக, அமமுக எந்தக் கூட்டணியில் சேரப் போகிறது? என அடுக்கடுக்கான கேள்விகள் இருந்தன.



இந்த நிலையில், திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் தொடர்கின்றன. புதிய வரவாக தேமுதிக இணைந்துள்ளது.

மறுபுறம் பிரதான எதிர்க்கட்சியான அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக, அன்புமணியின் பாமக, அமமுக உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன.

இவ்விரு கூட்டணியிலும் தொகுதிப் பங்கீடுகள் நிறைவுபெற்று ஒப்பந்தமும் கையொப்பமாகிவிட்டது.

புதிதாக கட்சித் தொடங்கி முதல்முறையாக தேர்தலை சந்திக்கவிருக்கும் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம், காங்கிரஸுடன் கூட்டணி அமைக்க முயற்சித்த நிலையில், தற்போது தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்துள்ளது.

சீமானின் நாம் தமிழர் கட்சி வழக்கம்போல் தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்து களமிறங்கியுள்ளது.

ஒரு வாரம் முன்பு வரை தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் நான்கு முனைப் போட்டியாகவே கருதப்பட்டது. இதனிடையே புதிதாக அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் என்ற கட்சியைத் தொடங்கிய சசிகலா, தைலாபுரம் சென்று ராமதாஸுடன் கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதையடுத்து, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல்களை ராமதாஸ் பாமகவும் அபுமமுகவும் இணைந்து சந்திக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 5 முனைப் போட்டியாக மாறியது.

இந்த நிலையில், தென் தமிழ்நாட்டில் தேவேந்திர குல வேளாளர்களின் வாக்கு வங்கியை வைத்திருக்கும் புதிய தமிழகம் கட்சி தனித்துப் போட்டியிடத் தயாராகி வருவதாக அக்கட்சியின் தலைவர் டாக்டர் கே. கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

கடந்த மக்களவைத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் போட்டியிட்ட புதிய தமிழகம் கட்சிக்கு வெறும் 2 தொகுதிகள் மட்டுமே கொடுக்க முன்வந்ததால் தே.ஜ. கூட்டணியில் இணைய கிருஷ்ணசாமி மறுத்துவிட்டார்.

தென் தமிழ்நாடு முழுவதும் புதிய தமிழகம் சார்பில் போட்டியிட சுமார் 100 க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, தொகுதிப் பங்கீட்டில் உடன்பாடு எட்டப்படாததால் திமுக கூட்டணியில் இருந்து விலகிய வேல்முருகன், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைமையில் புதிய கூட்டணி அமைக்கப்படும் என்று வியாழக்கிழமை அறிவித்துள்ளார்.

திமுக, அதிமுக கூட்டணிகளுக்கு கடும் சவாலாக மாறியிருக்கும் விஜய்யும், 8 சதவிகித வாக்குகளை வைத்துள்ள சீமானும் பலமான போட்டியாளர்களாக களத்தில் உள்ளனர்.

இவர்களுக்கு மத்தியில் போட்டியிடும் தொகுதிகளில் தங்கள் சமூதாயத்தைச் சார்ந்த வாக்குகளைப் பிரித்து திமுக, அதிமுகவின் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக ராமதாஸ் சசிகலா, கிருஷ்ணசாமி, வேல்முருகன் மாறுவார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்!

## வேட்பாளர் வரலாறு: கோவில்பட்டியில் 4வது முறையாக களம் காணும் கடம்பூர் ராஜூ

கோவில்பட்டி: மார்ச்.27-

கோவில்பட்டி சட்டப்பேரவை தொகுதியில் அதிமுக வேட்பாளராக கடம்பூர் செ.ராஜூ 4வது முறையாக களம் காண்கிறார். அதிமுக தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் மற்றும் அமைப்புச் செயலாளரான, முன்னாள் அமைச்சர் கடம்பூர் செ.ராஜூ (66), கோவில்பட்டி தொகுதியில் அதிமுக வேட்பாளராக 4வது முறையாக போட்டியிடுகிறார்.



கோவில்பட்டி தொகுதிக்கு உட்பட்ட கடம்பூர் கே.சிதம்பராபுரத்தில் அதிமுக கிளைச் செயலாளராக கட்சியில் பணியை தொடங்கிய கடம்பூர் செ.ராஜூ. மாவட்ட ஜெயலலிதா பேரவை இணைச் செயலாளர், மாவட்ட ஜெயலலிதா பேரவைச் செயலாளராக இருந்தார். தற்போது, வடக்கு மாவட்ட அதிமுக செயலாளர், அமைப்பு செயலாளர், சட்டப்பேரவை எதிர்க்கட்சி பொருளாளராக இருக்கிறார்.

2011ம் ஆண்டு தன்னை எதிர்த்து போட்டியிட்ட பாமக வேட்பாளர் கோ. ராமச்சந்திரனை 26,480 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். 2016ம் ஆண்டு திமுக வேட்பாளர் அ.சுப்பிரமணியனை விட428 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றிபெற்றார். 2021ம் ஆண்டு நடந்த தேர்தலில் அமமுக பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரனை 12,403 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தினார்.

தொடர்ந்து 2016 ம் ஆண்டு முதல் 2021 ம் ஆண்டு வரை தமிழக செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சராக பணியாற்றினார். கோவில்பட்டி சட்டப்பேரவை தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சர் பதவி பெற்ற முதல் நபர் இவரே. தற்போதைய தேர்தலிலும் அதிமுக வேட்பாளராக இவரையே கட்சித் தலைமை அறிவித்துள்ளது.

## வேட்பாளர் வரலாறு: தொண்டாமுத்தூரில் 4வது முறையாக களமிறங்கும் எஸ்.பி.வேலுமணி

கோவை: மார்ச்.27-

கோவை தொண்டாமுத்தூர் தொகுதியின் அதிமுக வேட்பாளராக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி அறிவிக்கப்பட்டுள்ளார். இவர், தொடர்ந்து 4வது முறையாக இத்தொகுதியில் களமிறங்குகிறார்.



அதிமுக சார்பில் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் முதல் கட்ட வேட்பாளர்கள் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. அதில், தொண்டாமுத்தூர் தொகுதியில் முன்னாள் அமைச்சரும், கோவை புறநகர் தெற்கு மாவட்ட செயலாளரும், தலைமை நிலைய செயலாளருமான எஸ்.பி.வேலுமணி எம்.எல்.ஏ. போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 200611 காலகட்டத்தில் பேரூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எஸ்.பி.வேலுமணி, கடந்த 2011ல் தொண்டாமுத்தூர் தொகுதியில் முதல் முறையாக போட்டியிட்டார். 2016ல் இரண்டாவது முறையாகவும், 2021ல் 3வது முறையாகவும் இத்தொகுதியில் போட்டியிட்டு வென்ற அவர், நடப்புத் தேர்தலில் 4வது முறையாக போட்டியிடுகிறார்.

குனியமுத்தூர் சுகுணாபுரத்தைச் சேர்ந்த எஸ்.பி.வேலுமணி, இளமைக்காலம் முதலே அதிமுகவில் உறுப்பினராக இருந்து பணியாற்றி வருகிறார். 2001ம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டு குனியமுத்தூர் நகராட்சி தலைவர் ஆனார்.

2006ம் ஆண்டு முதல் முறையாக பேரூர் சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிட்டு தன்னை எதிர்த்து போட்டியிட்ட வேட்பாளரை விட 14,235 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த காலகட்டத்தில் திமுக ஆளும் கட்சியாக இருந்ததால், திமுக அரசுக்கு எதிராக மறைந்த அதிமுக பொதுச்செயலாளர் ஜெயலலிதா அறிவித்த அத்தனை போராட்டங்களையும் முன்னின்று எஸ்.பி.வேலுமணி நடத்தினார்.

பின்னர், 2011, 2016 தேர்தல்களில் தொண்டாமுத்தூர் தொகுதியில் போட்டியிட்டு வென்ற எஸ்.பி.வேலுமணி அமைச்சராக பணியாற்றியுள்ளார். சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, தொழில்துறை, வருவாய்த்துறை, சட்டத்துறை, உள்ளாட்சித்துறை ஆகிய துறைகளின் அமைச்சராக பணியாற்றியுள்ளார்.

அதிமுகவில் தற்போதைய நிலையில் தவிர்க்க முடியாத தலைவராக உள்ள எஸ்.பி.வேலுமணி, கோவை உள்ளிட்ட மாவட்டங்களை உள்ளடக்கிய கொங்கு மண்டலத்தின் பொறுப்பாளராக வும் உள்ளார்.எஸ்.பி.வேலுமணி

## "ஒரு சொட்டு தண்ணீர் தராத காங்கிரஸுக்கு 28 எம்எல்ஏ சீட்டு, ஒரு ராஜ்யசபா சீட்டு!" சீமான் விமர்சனம்

மேட்டூர்: மார்ச்.27-

"ஒரு சொட்டு தண்ணீர் தராத காங்கிரஸ் கட்சிக்கு 28 எம்எல்ஏ சீட்டு, ஒரு ராஜ்யசபா சீட்டு கொடுத்து கூடவே வைத்திருக்கிறார்கள்," என நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் திமுகவை விமர்சித்துள்ளார்.

சேலம் மாவட்டம் மேட்டூர் சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட மேச்சேரி பேருந்து நிலையம் முன்பு இன்று நடந்த பிரச்சாரத்தில் நாதகவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மேட்டூர் வேட்பாளர் வித்யா வீரப்பனை ஆதரித்து பிரச்சாரம் செய்தார்.




அப்போது அவர் பேசியதாவது: ஒரு சொட்டு தண்ணீர் கொடுக்க முடியாது என்று கர்நாடக முதல்வர் சொல்கிறார். நமது முதல்வர் கர்நாடகா காங்கிரஸ் வெற்றிக்காக பிரச்சாரம் செய்தார். கட்சித் தலைவராக போய்க் கேட்பது தவறில்லை, ஆனால், முதல்வர் என்ற பெயரில் போய்க் கேட்பது எந்த விதத்தில் நியாயம்? ஒரு சொட்டு தண்ணீர் தராத காங்கிரஸ் கட்சிக்கு 28 எம்எல்ஏ சீட்டு, ஒரு ராஜ்யசபா சீட்டு கொடுத்து கூடவே வைத்திருக்கிறார்கள்.

கச்சத்தீவு, காவிரி நீர் உரிமை, முல்லை பெரியாறு உரிமை என அனைத்தையும் இழந்து நிற்கிறோம். காவிரி நடுவர் மன்ற தீர்ப்பு வழக்கை கருணாநிதி திரும்பப் பெற்றார். இதனால் 500 டிஎம்சி பெற வேண்டிய நாம் 150 டி.எம்சி.க்காக கையேந்தி நிற்கிறோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தண்ணீர் தேவையில் தன்னிறைவு திட்டம் கொண்டுவந்து கடலில் கலக்கிறதை தடுத்து நிறுத்தி ஏரிகள், குளங்களை நிரம்பி அடுத்தவரிடத்தில் கையேந்தி நிற்கிற நிலைமையை மாற்றுவோம்.

ஒரு விழுக்காடு, அரை விழுக்காடு வைத்திருக்கிறவர்கள் கூட்டணிக்காக பேரம் பேசி செல்கிற நேரத்தில் தனித்தன்மையாக மக்களை சந்தித்து 8.5 விழுக்காடு வாக்கு வைத்திருக்கிறோம். திமுக அதிமுக தனியாக இதுதான் எங்கள் வாக்குகள் என்று சொல்ல முடியாது. எவ்வளவோ பதவி ஆசை காட்டியபோதும், நாங்கள் பதவி, பணத்திற்காக வந்தவர்கள் அல்ல மக்களின் உதவிக்காகவும், தமிழ் இனத்திற்காகவும் வந்தவர்கள். மாற்றம் என்பது சொல் அல்ல அது செயல்.

நாங்கள் வந்தால் மிக்சி, கிரைண்டர் அண்டா, பிரிட்ஜ், டிவி, ரூ 5,000, ரூ 10,000, தருவோம் என்றெல்லாம் சொல்ல மாட்டோம். நீங்கள் அதனை வாங்கிக் கொள்கிற வேலைவாய்ப்பும், வருவாய் பெருக்கத்தையும் ஏற்படுத்தி கொடுப்போம். ஆட்சிக்கு வந்தவுடன் டாஸ்மாக்கை மூடுவேன். பனை பால், தென்னை பால், ஈச்சம்பால், மூலிகைச்சாறு என்று கல்லை திறந்து விடுவேன்.

அதிமுக, திமுக வெல்வது சாதாரண நிகழ்வு தான். அவர்கள் பலமுறை வென்று இருக்கிறார்கள் ஆனால், நாங்கள் வெல்வது சரித்திரத்தில் பதிவிடும் மாபெரும் புரட்சி. வீரப்பன் திருடன் என்றால் ஜெயலலிதா, கருணாநிதிக்கு என்ன பெயர்? விற்றவனை தேடிப் பிடிக்க அலைந்தார்கள். ஆனால், வாங்கியவனை ஏன் தேடவில்லை. இவ்வாறு அவர் பேசினார்.

போலீஸாருடன் நாதக நிர்வாகிகள் வாக்குவாதம்: மேச்சேரி பேருந்து நிலையம் முன்பு நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வாகன பிரச்சாரம் மேற்கொண்டார். அவரது பிரச்சார வாகனம் மற்றும் ஒளிப்பதிவு மேற்கொள்ள வந்த வாகனம் சாலை நடுவே நிறுத்தியதால் போக்குவரத்துக்கு நெரிசல் ஏற்பட்டது.

அப்போது பாதுகாப்புப் பணியில் இருந்த மேச்சேரி காவல் ஆய்வாளர் மகேந்திரன் தலைமையிலான போலீஸார் வாகனத்தை ஓரமாக நிறுத்துமாறு அறிவுறுத்தினர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போலீஸார் உடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர், சீமான் வந்ததால் வாக்குவாதத்தை கைவிட்டு, அவரது பேச்சை கவனிக்க தொடங்கினர்.

## பெண்கள் குறித்த பொன்ராஜ் கருத்துக்கு விஜய் கண்டனம் திமுக மீதும் காட்டமான விமர்சனம்

சென்னை: மார்ச்.27-

தவெக ஆதரவுப் பெண்கள் குறித்த அரசியல் விமர்சகர் பொன்ராஜின் கருத்து அக்கட்சியின் தலைவர் விஜய் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும், இந்த விவகாரத்தில் திமுகவையும் அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று வெளியிட்ட எக்ஸ் தளப் பதிவில், "இந்த மண்ணின் பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரிய என் அம்மா, அக்கா, தங்கைகளைத் தரக்குறைவான, சொல்லொணா வார்த்தையால் திமுகவின் ஆதரவாளராகச் செயல்பட்டு வரும் கைக்கூலி ஒருவர் வாய்க்கு வந்தபடி விமர்சித்திருக்கிறார். திமுக தலைமையின் அரவணைப்பிலும் ஆதரவிலும் செயல்படும் இத்தகைய ஆதாய சூதாடிகளுக்குத் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இதுபோன்ற நபர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காத திமுக அரசையும் வன்மையாகக் கண்டிக்கிறேன். தவெகவைச் சீண்டுவதாக நினைத்து, ஒட்டுமொத்தப் பெண்களையும் அவமதிக்கும் இச்செயலால், வருகின்ற தேர்தலில் தாய்க்குலத்தின் ஏகோபித்த முடிவால் தீய சக்தி திமுக மண்ணைக் கவ்வப் போவது உறுதி உறுதி உறுதி" என்று விஜய் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தவெக நிர்வாகி ஆதவ் அர்ஜுனா தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "நமது தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த பெண்களை விமர்சிக்கிறேன் என்ற பெயரில், பெருமதிப்பிற்குரிய தமிழ்நாட்டின் பெண்களை வக்கிரமான வார்த்தைகளில் இழிவுபடுத்தியுள்ள பொன்ராஜின் கருத்து வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

மாபெரும் மனிதர்களிடம், சிறந்த பொறுப்பில் வேலை செய்தவர் என்றெல்லாம் சொன்னாலும், பின்னாளில் திமுக ஆதரவாளராக மாறிய பிறகு அடிப்படை அறமும், தேவையான மனித மாண்பும் துளியும் அற்றவராகவே பொன்ராஜ் செயல்பட்டு வந்திருப்பதாகத் தெரிகிறது. எந்தவொரு சாமானிய மனிதனும் சொல்லக் கூசும் வார்த்தைகளை, ஊடகத்திற்கு முன் உட்கார்ந்துகொண்டு ஒருவர் இதுபோல் பேசுகிறார் என்றால் திமுக அதிகார பின்புலம் இல்லாமலா என்ற சந்தேகம் எழுகிறது?

இதுபோன்ற அருவருக்கத்தக்க வகையில் திமுகவுக்கு ஆதரவாகப் பேசும் நபர்களைத் தனது அமைதியின் மூலம் திமுக தலைவர் ஸ்டாலின் ரசித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறாரா?

கண்ணியத்துக்குரிய தமிழ்நாட்டின் பெண்களுக்கு எதிரான வன்முறை கருத்துகளைத் தெரிவித்து பதற்றமான சூழலைத் தொடர்ந்து உருவாக்கிக்கொண்டிருக்கும் பொன்ராஜ் மீது தேர்தல் ஆணையமும், காவல் துறையும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அநாகரிக அரசியலின் உச்சமாக தமிழக பெண்கள் மீது மோசமான வன்மத்தை வெளிப்படுத்தியுள்ள கருத்து எந்த நிலையிலும் ஏற்கக் கூடியதல்ல. தான் பேசிய கருத்துக்கு பொன்ராஜ், உடனடியாக தமிழக பெண்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லையெனில், பெண்கள் மீது மோசமான பார்வை கொண்டவர்களுக்கு தங்கள் ஜனநாயக போராட்டத்தின் மூலம் தக்க பாடம் புகட்டுவார்கள் தமிழக மகளிர்" என்று அவர் தெரிவித்துள்ளார்.



## சிவகங்கை மாவட்ட தவெக நிர்வாகிகள் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர்

காளையார்கோவில் மார்ச். 27-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் பேரூரைச் சேர்ந்தவர் ராஜ் குமார் . இவர் தவெக வில் தெற்கு மாவட்ட துணைச் செயலாளராகப் பணியாற்றி வந்தார்... இந்நிலையில் அவர் அக்கட்சியில் இருந்து விலகி தனது ஆதரவாளர்களான செல்வராஜ். கரண் . அன்பு . லிவிராஜா . டொனால்ட் . சுப்புராம் உள்ளிட்ட இருபதிற்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சி நிர்வாகிகள் தங்களை திமுக வில் இணைத்துக் கொண்டனர்...

காளையார்கோவில் கிளைக் கழக செயலாளர் . தொழிலதிபர் ஆர்.வி.எஸ்.அரங்கநாதன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் போது துணைச் செயலாளர். தொழிலதிபர் கோலாந்தி கோதண்டபாணி. காளையார்கோவில் வி.எஸ்.எம் .எஸ். எஸ்தர் மேரி ஸ்டீபன் . துணைச் செயலாளர் விஏஓ.முத்து . ஒன்றிய இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் தொழிலதிபர் ஜான் சந்தியாகு. உள்ளிட்ட ஏராளமானோர் உடனிருந்தனர்...

இணைத்துக் கொண்ட அனைவருக்கும் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கழக கைத்தறி வேட்டி அணிவித்து தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்...

## சிவகங்கை: 108 ஆம்புலன்ஸ் சேவையை இனி வாட்ஸ்அப் மூலம் பெறலாம்







சிவகங்கை மார்ச். 27-

அவசர கால 108 ஆம்புலன்ஸ் சேவையை பொதுமக்கள் எளிதில் அணுகும் வகையில், வாட்ஸ்அப் (WhatsApp) மூலம் ஆம்புலன்ஸ் முன்பதிவு செய்யும் புதிய வசதி அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

அவசர காலங்களில் இருப்பிடத்தைக் கண்டறிவதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்கவும், விரைவான மருத்துவ உதவியை உறுதி செய்யவும் இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பயன்படுத்துவது எப்படி?

* 9445030725 என்ற எண்ணை உங்கள் கைபேசியில் சேமித்துக்கொள்ளவும்.

* அந்த எண்ணிற்கு வாட்ஸ்அப் மூலம் 'Hi' என்று செய்தி அனுப்பவும்.

* தோன்றும் தெரிவுகளில் 'Book Ambulance' என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

* பின்னர் 'Send Location' என்பதைக் கிளிக் செய்து உங்கள் இருப்பிடத்தைப் பகிரவும்.

இவ்வாறு செய்வதன் மூலம், கட்டுப்பாட்டு அறை உங்கள் இருப்பிடத்தை உடனடியாக அறிந்து, அருகிலுள்ள ஆம்புலன்ஸை விரைவாக அனுப்பி வைக்கும். உயிரைக் காக்கும் இக்கட்டான நேரங்களில் லொகேஷன் தெரியாமல் அலைவதைத் தவிர்க்க இந்த வசதி மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2026 சட்டமன்றத் தேர்தல்: மானாமதுரை தொகுதியில் போட்டியிட அர்ஜுன் - ஆதிவளவன் விருப்ப விண்ணப்பம்



மானாமதுரை, மார்ச். 27-

2026ம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தலில், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் மானாமதுரை (தனி) சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட அர்ஜுன் @ ஆதிவளவன் விருப்ப விண்ணப்பம் அளித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த இவர், 2006ம் ஆண்டு முதல் கட்சியில் இணைந்து பணியாற்றி வருகிறார். தற்போது சிவகங்கை மாவட்டப் பொருளாளர் பொறுப்பில் இருக்கும் இவர், சென்னையில் நேற்று (26.03.2026) தனது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார்.பி.ஏ மற்றும் டி.எட் முடித்துள்ள இவர், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம் மிளகனூர் பகுதியைச் சேர்ந்தவர். கட்சித் தலைமைக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த விண்ணப்பத்தின் வரிசை எண் 2137 ஆகும்.

## நீலகரி மாவட்டம், குன்னூர சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தூதூர்மட்டம் முத்துமாரியம்மன் திருக்கோவில் திருவிழா

### நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம்.ராஜு கலந்து கொண்டார்



நீலகிரி, மார்ச்.27-

நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம். ராஜுகலந்து கொண்டார்

உடன் மாவட்ட அவைத் தலைவர் போஜன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில்நாதன், மேலூர் ஒன்றிய கழகச் துணை செயலாளர் பாலசுப்பிரமணி, மேலூர் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் மனேஷ், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் நடனகுமார் மற்றும் CTN பாரூக், கார்த்திக், சகாயநாதன், சேகர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயில் பங்குனித் திருவிழா மார்ச் 29ல் கொடியேற்றத்துடன் தொடக்கம்

### அறங்காவலர் வெங்கடேச செட்டியார் தகவல்

தாயமங்கலம், மார்ச்.27-

சிவகங்கை மாவட்டம், தாயமங்கலத்தில் உலகப் புகழ்பெற்ற அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் பங்குனிப் பெருந்திருவிழா வரும் மார்ச் 29ஆம் தேதி கோலாகலமாகத் தொடங்க உள்ளது. இது குறித்து கோயில் அறங்காவலர் வெங்கடேச செட்டியார் வெளியிட்டுள்ள விழா அட்டவணையில், 11 நாட்கள் நடைபெறும் இந்த திருவிழாவின் முக்கிய நிகழ்வுகள் விவரிக்கப்பட்டுள்ளன.



திருவிழா கால அட்டவணை:ஒவ்வொரு நாளும் அம்மன் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார்:

மார்ச் 29: கொடியேற்றத்துடன் விழா இனிதே தொடங்குகிறது.

மார்ச் 30 - 31: சிம்ம வாகனத்தில் அம்மன் வீதி உலா. ஏப்ரல் 01: குதிரை வாகனப் புறப்பாடு. ஏப்ரல் 02: காமதேனு வாகனத்தில் எழுந்தருளுதல். ஏப்ரல் 03: அன்ன வாகனப் புறப்பாடு.

ஏப்ரல் 04: பூத வாகனத்தில் அம்மன் உலா. ஏப்ரல் 05: விழாவின் முக்கிய நிகழ்வான பொங்கல் வைபவம்.

ஏப்ரல் 06: பிரம்மாண்டமான தேரோட்டம்.

ஏப்ரல் 07: பால்குடம் எடுத்தல் மற்றும் இரவு பூப்பல்லக்கு விழா. ஏப்ரல் 08: தீர்த்தவாரியுடன் விழா நிறைவு பெறுகிறது.

இந்த ஆண்டு விழாவிற்குத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக அறங்காவலர் குழு மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் குடிநீர், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு வசதிகள் உள்ளிட்ட விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 ஐ முன்னிட்டு 110 குன்னூர் சட்டமன்ற தொகுதியில் பணியாற்றும் தேர்தல் அலுவலர்களுக்கு மின்னனு வாக்குபதிவு இயந்திரம், வாக்காளர் சரிபார்க்கக்கூடிய காகிதத்தணிக்கைத் தடம் ஆகியவற்றை கையாளும் பயிற்சியினை சார் ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கப்பட்டது.



## குன்னூர் சரவணமலை அருள்மிகு பாலதண்டாயுதபாணி கோவில் மஹா கும்பாபிஷேக விழா

நீலகிரி, மார்ச். 27-

நீலகிரி மாவட்டம், குன்னூர் அட்டடி அருகே அடர்ந்த வனப் பகுதியில் அமைந்துள்ள சரவணமலை பாலதண்டாயுதபாணி திருக்கோவிலில், நூதன ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா கோலாகலமாக நடைபெற்றது.

விழாவையொட்டி, விநாயகர் வழிபாடு, புண்யாகம், மஹா கணபதி ஹோமம், மஹாலக்ஷ்மி ஹோமம், வாஸ்து சாந்தி, பிரவேச பலி, எந்திர ஸ்தாபனம், விக்கிரக பிரதிஷ்டை மற்றும் விமான கலசம் பிரதிஷ்டை, கும்ப அலங்காரம், யாகசாலை பிரவேசம், திரவ்யாஹுதி, மஹா பூர்ணாஹுதி, இரண்டாம் கால வேள்வி நடைபெற்றது.

தொடர்ந்து வேத அர்ச்சகர்கள் தீர்த்த குடங்கள் விமான கலசங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்தனர்.

பிறகு ஸ்ரீ மஹா கணபதி, ஸ்ரீ பாலதண்டாயுதபாணி மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து மகா அபிஷேகம் அலங்கார ஆராதனைகளுடன் நடைபெற்ற விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு முருகனை வழிபட்டுச் சென்றனர்.

பிறகு அன்னதானம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோவில் கிருத்திகை நல சங்கத்தினர், கோவில் கமிட்டியினர் முருக பக்தர்கள் செய்திருந்தனர்.




### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

## தேனி மாவட்டத்தின் சார்பாக கோடைகால நீச்சல் பயிற்சி முகாம்

தேனி மார்ச். 27-

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தேனி மாவட்டத்தின் சார்பாக கோடைகால நீச்சல் பயிற்சி முகாம் 01.04.2026 முதல் 14.06.2026 வரையிலான காலங்களில் நடைபெறவுள்ளது. நீச்சல் கற்றுக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் நடைபெறும் 12 நாட்கள் பயிற்சி முகாம் 5 கட்டங்களாக நடைபெறவுள்ளது.

விண்ணப்பிக்கலாம். அனைவரும் இப்பயிற்சிக்கு இப்ப யிற்சிக்கு 12 நாட்களுக்கு கட்டணம் ரூ.1200/ (18% GST) ஆகும். இத்தொகையினை Phone pay, Gapy, Debit-card மூலம் pos machine, QR code வழியில் செலுத்த முடியும். நீச்சல் கற்றுக்கொள்ளும் திட்டத்தின் கீழ் வரும் சிறுவர் மற்றும் சிறுமியர் குறைந்தபட்சம் உயரம் 4 அடி (120 செ.மீ) இருக்க வேண்டும்.

முதற்கட்டமாக 01.04.2026 முதல் 16.04.2026 வரையிலும், இரண்டாம் கட்டமாக 17.04.2026 முதல் 02.05.2026 வரையிலும், மூன்றாம் கட்டமாக 03.05.2026 முதல் 16.05.2026 வரையிலும், நான்காம் கட்டமாக 17.05.2026 முதல் 3105.2026 வரையிலும், ஐந்தாம் கட்டமாக 02.06.2026 முதல் 14.06.2026 வரையிலும் நடைபெற உள்ளது. தினசரி காலை வேலைகளில். 07.30 AM to 08.30 A.M. 08.30 AM to 09.30 AM மற்றும் 09.30 AM to 10.30 AM மாலை வேலைகளில்.03.00 PM to 04.00 PM 04.00 PM to 05.00 PM மற்றும் 05.00 PM to 06.00 PM நீச்சல் கற்றுக்கொடுக்கப்படும்.

மேற்கண்ட நீச்சல் கற்றுக்கொள்ளும் பயிற்சி முகாமில் கலந்து கொள்பவர்கள் 12 நாட்களுக்கு (ஒருநாளைக்கு 1 மணிநேரம்) பயிற்சிக்கான தொகை .1200/ (18% GST) 60 Phone pay, Gapy, Debitcard po pos machine. QR code வழியில் செலுத்திடலாம்.

மேற்கண்ட விபரங்கள் தொடர்பாக மாவட்ட விளையாட்டு அரங்கம் 04546 253090, மாவட்ட விளையாட்டு அலுவலர் 74017 03505 மற்றும் நீச்சல் பயிற்றுநர் 83005 10764 ஆகிய தொலைப்பேசி எண்களுக்கு தொடர்பு கொண்டு தெரிந்துக் கொள்ளலாம்.

மேலும், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் அலுவலர் மாவட்ட விளையாட்டு அரங்கம், மாவட்ட ஆட்சித்தலைவர் பெருந்திட்ட வளாகம், தேனி மாவட்டம் என்ற முகவரிக்கு நேரில் சென்று தெரிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்.

## கோவிலூரில் சுற்றுச்சூழல் குறித்த தனிநபர் நடிப்பு மற்றும் கலைக் கண்காட்சி போட்டிகள்

காரைக்குடி மார்ச்.27-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கோவிலூர் அரசு உயர்நிலைப்பள்ளி கூட்டரங்கில் தனிநபர் நடிப்பு மற்றும் கலைக் கண்காட்சி போட்டிகள் நடைபெற்றது.

தேசிய பசுமைப் படை சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பிரிட்டோ தலைமை வகித்தார். கோவிலூர் தலைமை ஆசிரியர் ராமர் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி வரவேற்புரை ஆற்றினார். சாக்கோட்டை கண்ணங்குடி ஒன்றியத்தில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவ மாணவிகள்





சுற்றுச்சூழல் மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வுக்கான தனிநபர் நடிப்பு கலைக் கண்காட்சி போட்டிகளில் கலந்து கொண்டார்கள். நடுவர்களாக ஜவஹர் ஸ்டீபன் மிக்கேல்ராஜ் சிறப்பாக பணியாற்றினார்கள்.

தனிநபர் நடிப்பு போட்டியில் ஹர்சிதா ஸ்ரீ அரியக்குடி அரசு மேல்நிலைப்பள்ளி முதலிடத்தையும் தனுஜா ஸ்ரீ முத்துப்பட்டணம் அரசு மேல்நிலைப்பள்ளி இரண்டாமிடத்தையும் வெற்றிவேல் கோவிலூர் அரசு உயர்நிலைப்பள்ளி மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

கலைக் கண்காட்சி போட்டியில் முத்துபட்டணம் அரசு மேல்நிலைப்பள்ளி முதலிடத்தையும் அரியக்குடி அரசு மேல்நிலைப்பள்ளி இரண்டாமிடத்தையும் கோவிலூர் அரசு உயர்நிலைப்பள்ளி மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

மரம் வளர்ப்போம். மழை பெறுவோம். ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் நெகிழிகளை தவிர்ப்போம் என்ற விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது. கோவிலூர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் போட்டிக்கான ஏற்பாட்டினை சிறப்பாக செய்திருந்தனர்.

சிவகங்கை மாவட்ட பசுமை தோழர் ஷர்மிளா நன்றி கூறினார்.



# செங்குன்றத்தில் சமூக நீதி அரசியல் கூட்டம்

மாதவரம், மார்ச்.27-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் அண்ணா பேருந்து நிலையம் அருகே அகில இந்திய ஜனநாயக மக்கள் கட்சி சார்பில் சமூக நீதி அரசியல் கூட்டம் தேசியத் தலைவர் டாக்டர் வி.எஸ். ஐசக் தலைமையில் நடைபெற்றது. மாநில பொதுச் செயலாளர் பேராயர் டேவிட் குட்டி அனைவரையும் வரவேற்றார்.

அகில இந்திய ஜனநாயக மக்கள் கட்சி நிர்வாகிகள் பிரேமாஜசக், கிளின்டன் ஜெபராஜ், ஜாஸ்மின்ஜான், ஸ்டீபன்சன் குமார், தேவ ஆசீர்வாதம், ஜெய்சன், தேவசித்தம், பர்ணாபாஸ்சைமன், கிறிஸ்துராஜா, சரவணன், திருவள்ளூர் மாவட்ட பேராயர் ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கோரிக்கைகளான, 10.5 சதவீதம் கிறிஸ்தவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும், தலித் கிறிஸ்தவர்களை எஸ்.சி. பட்டியலில் சேர்க்க வேண்டும், கிறிஸ்தவ இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தகுதி அடிப்படையில் வேலை வழங்க வேண்டும், படித்த கிறிஸ்தவ பெண்களுக்கு அரசு வேலை வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை அதிமுக ஏற்றுக் கொண்டால் அகில இந்திய ஜனநாயக மக்கள் கட்சி அதிமுகவிற்கு வாக்களிப்பதோடு களத்தில் பணியாற்றவும் தயாராக இருக்கின்றோம்.என்று டாக்டர் ஐசக் சிறப்புரையாற்றினர் .இதில் கிறிஸ்துவ போதகர்கள் செங்குன்றம் சுற்றுவட்டார கிருஸ்துவர்கள் திரளாக கலந்துகொண்டனர். முடிவில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் மோக ன்ஏசு தாஸ் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# தேனி மாவட்டத்தில் வாக்குப்பதிவு இயந்திரங்களை கணினி மூலம் சுழற்சி முறையில் முதற்கட்டமாக ஒதுக்கீடு செய்யும் பணிகள்

தேனி மார்ச்.,27-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில. 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கணினி மூலம் சுழற்சி முறையில் (Randomization) முதற்கட்டமாக ஒதுக்கீடு செய்யும் பணிகள் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ் ஜீத்சிங், தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது. தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு

தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199.பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெற உள்ளது. அதன்படி, தேனி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கணினி மூலம் சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



198.ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 344 வாக்குச்சாவடி மையங்களுக்கு 414 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 414 கட்டுப்பாட்டுக் கருவியும், வாக்காளர்கள் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் 448 (VVPAT) இயந்திரங்களும்,

199.பெரியகுளம் (தனி) சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 359 வாக்குச்சாவடி மையங்களுக்கு 430 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 430 கட்டுப்பாட்டுக் கருவியும், வாக்காளர்கள் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் 466 (VVPAT) இயந்திரங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 200.போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 346 வாக்குச்சாவடி மையங்களுக்கு 415 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 415 கட்டுப்பாட்டுக் கருவியும், வாக்காளர்கள் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் 449 (VVPAT) இயந்திரங்களும்,

201.கம்பம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 345 வாக்குச்சாவடி மையங்களுக்கு 412 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 412 கட்டுப்பாட்டுக் கருவியும், வாக்காளர்கள் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் 447 (VVPAT) இயந்திரங்களும்,

என மொத்தம் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு சேர்த்து 1,394 வாக்கச்சாவடி மையங்களுக்கு 1,671 வாக்குப்பதிவு இயந்திரங்களும் (BU),1,671 கட்டுப்பாட்டுக் கருவியும் (CU), வாக்காளர்கள் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் 1,810 (VVPAT) இயந்திரங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகளின் முன்னிலையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திர சேமிப்புக் கிட்டங்கி திறக்கப்பட்டு, சட்டமன்றத் தொகுதி வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கு அனுப்பி வைக்கும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். முன்னதாக, தேனி மாவட்டத்தில் 4 சட்டமன்றத் தொகுதிகளின் வேட்பாளர் / அரசியல்கட்சிகளின் முகவர்கள் மேற்கொள்ளும் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் பொருட்டு தேர்தல் தொடர்பான செலவினங்களுக்குரிய விலை / வாடகை / கூலி ஆகியவை நிர்ணயம் செய்யப்பட்ட விலைப்பட்டியல் குறித்து அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப்பிரதி நிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், தேர்தல் நடத்தும் அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர்.ரஜத் பீடன், தேர்தல் நடத்தும் அலுவலர் / தனித்துணை ஆட்சியர். கவிதா, தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட வழங்கல் அலுவலர். நல்லையா, தேர்தல் நடத்தும் அலுவலர் / உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் .சையத் முகைதீன் இப்ராஹிம், வட்டாட்சியர் (தேர்தல்).சுருளி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / வட்டாட்சியர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சி பிரதிநிதிகள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# திருக்காட்டுப்பள்ளி கடைவீதியில் சி.சி.டி.வி.கேமரா பொருத்த 1.50 லட்சம் நன்கொடை அனைத்துவணிகள் கூட்டமைப்பின் சார்பில் வழங்கப்பட்டது

தஞ்சாவூர்.மார்ச்.27-

திருக்காட்டுப்பள்ளியில் கடைவீதி, மற்றும் முக்கிய வீதிகளில் ஏற்படும் கூட்ட நெரிசல், கடைகளின் அருகில் சாலையிலேயே இருசக்கர வாகனங்களை நிறுத்தி போக்குவரத்திற்கு இடையூராக இருப்பது. மேலும் பண்டிகை காலங்களில் கூட்ட நெரிசலை பயன்படுத்தி திருடர்கள் திருடா வண்ணம் கண்காணிக்கவும், இருசக்கர வாகனங்கள் திருட்டு, போன்ற பல்வேறு காரணங்களுக்காக முன்பு சி.சி.டி.வி.கேமரா பொருத்தப்பட்டு காவல் துறையினரால் கண்காணிக்கப்பட்டு வந்தது. அந்த கேமராக்கள் பழுதடைந்து வேலை செய்யாமல் போகவே திருக்காட்டுப்பள்ளி ஆய்வாளர் அகிலன் இங்கு செயல்பட்டு வரும் அனைத்து வணிகர்கள் கூட்டமைப்பினரிடம் ஆலோசனை நடத்தினார். இதில் திருக்காட்டுப்பள்ளியில் அனைத்து வணிகர்கள் கூட்டமைப்பின் சார்பில் திருக்காட்டுப்பள்ளி கடைவீதி முழுவதும் தொடர் கண்காணிப்பில் இருப்பதை உறுதிபடுத்துவதற்காக காவல்துறை ஆய்வாளர் அகிலன், மற்றும் காவல் உதவி ஆய்வாளர் சூர்யா ஆகியோரிடம் சி.சி.வி.வைக்க ரூ.1.50 லட்சம் பணத்தை வணிகர் சங்க கூட்டமைப்பின் தலைவரும் வணிகர் சங்க பேரமைப்பின் தஞ்சை மாவட்ட செயலாளருமான தியாக.சுந்தரமூர்த்தி தலைமையில் செயலாளர் வரதராஜன், செந்தில்குமார், பொருளாளர் கோபி, ஆகியோர் வழங்கினர். மற்றும் வணிகர்கள் சங்க நிர்வாகிகள் விஜயக்குமார், மாணிக்கம், சரவணன், பெரியசாமி ஆகியோர் உடனிருந்தனர்.



# கிருஷ்ணகிரி அருகே 20க்கும் மேற்பட்டோர் பிஜேபியிலிருந்து விலகி மதியழகன் எம் எல் ஏ முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்

கிருஷ்ணகிரி, மார்ச்.27-

கிருஷ்ணகிரி அருகே உள்ள வெங்கிலிகானப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த பாரதிய ஜனதா கட்சி (பிஜேபி) மாவட்ட நிர்வாகிகள் ஸ்ரீதர் மற்றும் அன்பு தலைமையில் 20க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி திமுகவில் இணைந்தனர்.

இந்த இணைப்பு நிகழ்ச்சி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான எம்எல்ஏ மதியழகன் முன்னிலையில் நடைபெற்றது. புதியதாக இணைந்தவர்களுக்கு கட்சித் துண்டு அணிவித்து வரவேற்பளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் நாகராஜ், ஒன்றிய செயலாளர் தனசேகரன், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டு கட்சி வளர்ச்சிக்காக ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென கேட்டுக் கொண்டனர்.

மேலும் முன்னாள் ஊராட்சி குழு துணை தலைவர் சசிகலா தசரா உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டு, புதிய உறுப்பினர்களை உற்சாகமாக வரவேற்றனர். இந்த இணைப்பு நிகழ்வு அப்பகுதியில் அரசியல் வட்டாரங்களில் கவனம் ஈர்த்துள்ளது.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, 53 கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி தேர்தல் முன்னிட்டு, கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறையை பார்வையிட்டு தேர்தல் தொடர்பாக வரப்பெற்ற புகார்கள், பிரச்சார அனுமதி குறித்த பதிவேடுகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார்,நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஷாஜகான், கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையர் சேகர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# பழனியில் பங்குனி உத்திரத் திருவிழா

# புனித தீர்த்தங்கள் கொண்டுவந்து மூலவருக்கு அபிஷேகம் செய்து வழிபட்டனர்

பழனி மார்ச்.27-

அறுபடை வீடுகளில் மூன்றாம்படை வீடான பழனி திருஆவினன்குடியில் பங்குனி உத்திரத் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. சேவல், மயில் படங்கள் பொறிக்கப்பட்ட கொடிக்கு பூஜை செய்யப்பட்டு காலை 9.45மணியளவில் கோவில் கொடிமரத்தில் கொடியேற்றம் செய்யப்பட்டது. தொடர்ந்து அருள்மிகு முத்துக்குமாரசாமி வள்ளி,தெய்வானை சமேதர் மற்றும் கொடிமரத்திற்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. பத்துநாட்கள் நடைபெறும் பங்குனி உத்திரத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருக்கல்யாணம் 6ம் நாள் திருவிழாவான வருகிற மார்ச் 31ம்தேதியும், பங்குனி உத்திரத் தேரோட்டம் ஏழாம் நாள் திருவிழாவான வருகிற ஏப்ரல் 1ம்தேதி புதன்கிழமை அன்றும் நடைபெறுகிறது. ஏப்ரல் 4ம் தேதியன்று கொடியிறக்கத்துடன் பங்குனி உத்திரத்திருவிழா நிறைவடைகிறது. திருவிழாவை முன்னிட்டு ஈரோடு மாவட்டம் கொடுமுடி காவிரி ஆற்றில் இருந்து தீர்த்தம் எடுத்து பாதயாத்திரையாக வந்து பழனிஆண்டவருக்கு அபிஷேகம் செய்து வழிபடுவது வழக்கம். முதல் நாளான இன்று காசி, கயா, திரிவேணி சங்கமம், கொடுமுடி ஆகிய ஊர்களில் இருந்து கங்கை, யமுனை , சரஸ்வதி மற்றும் காவிரி ஆற்றில் இருந்து எடுத்து வரப்பட்ட புனித தீர்த்தங்கள் கொண்டுவந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் அபிஷேகம் செய்து வழிபட்டனர். திருவிழாவிற்கான ஏற்பாடுகளை பழனி கோவில் நிர்வாகம் மற்றும் மாவட்ட நிர்வாகம் செய்து வருகின்றது. கொடியேற்ற நிகழ்ச்சியில் பழனி கோவில் அறங்காவலர் குழுவினர், இணை ஆணையர் மாரிமுத்து மற்றும் நகர முக்கிய பிரமுகர்கள் உட்பட ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர்.



# காவேரிப்பட்டினம் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம்

## எம்எல்ஏ மதியழகன் பங்கேற்பு

கிருஷ்ணகிரி, மார்ச்.27-

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காவேரிப்பட்டினம் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கிழக்கு ஒன்றிய செயலாளர் மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான எம்எல்ஏ தே.மதியழகன் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார்.

பாலேகுளி, எருமாம்பட்டி, நாகரசம்பட்டி பேரூர், தளிஹள்ளி, மாரிசெட்டிஹள்ளி உள்ளிட்ட ஊராட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில், வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு பூத் கமிட்டி நிர்வாகிகள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. திமுக அரசின் சாதனைகளை வீடு தோறும் சென்று மக்களிடம் எடுத்துச் சொல்லி, நூறு சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்ய ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் பேரூராட்சி தலைவர் தம்பிதுரை வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாவட்ட பொருளாளர் கதிரவன், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், முன்னாள் ஊராட்சி குழு துணை தலைவர் சசிகலா தசரா உள்ளிட்டோர் கலந்து கொண்டு கருத்துக்கள் பகிர்ந்தனர்.

மேலும் மாநில, மாவட்ட, ஒன்றிய மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்று, தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்ள ஒற்றுமையுடன் செயல்பட உறுதிமொழி எடுத்தனர்.




■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, 53 கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, கிருஷ்ணகிரி நகராட்சி, பழையபேட்டை அரசு நடுநிலைப்பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு சாவடி மையங்களில் அடிப்படை வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஷாஜகான், கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையர் சேகர், உதவி தேர்தல் அலுவலர், வட்டாட்சியர் ரமேஷ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# புதுவையில் பெண் வேட்பாளர்களுக்கு வாய்ப்பு தராத திமுக, பாஜக, அதிமுக

புதுச்சேரி, மார்ச்,,27-

புதுச்சேரியில் ஆண்களை விட பெண் வாக்காளர்கள் அதிகம். ஆனால், சட்டப்பேரவைத் தேர்தலில் ஒவ்வொரு முறையும் பெண் உறுப்பினர்களுக்கு குறைந்த அளவே கட்சிகள் வாய்ப்பளித்து வருகின்றன. புதுச்சேரியின் முதல் சட்டப்பேரவையில் (1963 முதல் 1964) சரஸ்வதி சுப்பையா, சாவித்திரி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

2வது சட்டப்பேரவையில் (1964 68) பத்மினி சந்திர சேகரன், அங்கம்மாள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 3வது சட்டப்பேரவையில் (1969 74) வீரம்மாள் தேர்வு செய்யப் பட்டார். 4வது, 5வது சட்டப்பேரவைக்கு பெண்கள் யாரும் எம்எல்ஏ வாக தேர்ந்டுெக்கப்படவில்லை. 6வது சட்டப்பேரவையில் (198083) ரேணுகா அப்பாதுரை தேர்ந்தெடுக் கப்பட்டார்.

அவர் அமைச்சராகவும் இருந்தார். 7வது சட்டப் பேரவையில் (198590) கோமளா தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே சட்டப்பேரவைக்கு செல்வி சுந்தரம் நியமன எம்எல்ஏவாக நியமிக்கப்பட்டார். 8வது சட்டப்பேரவைக்கு பெண்கள் யாரும் எம்எல்ஏ வாக தேர்ந் தெடுக்கப்பட வில்லை.

9வது சட்டப்பேரவைக்கு 1991ல் கே.பக்கிரி அம்மாள், 10வது சட்டப்பேரவைக்கு 1996ல் அரசி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 11வது சட்டப்பேரவையில் 2001ல் மேரிதெரசா நியமன எம்எல்ஏவாக இருந்தார். அதன்பிறகு பெண் எம்எல்ஏக் கள் யாரும் இல்லை.

15 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த 2016 சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் நெட்டப்பாக்கம் (தனி) தொகுதியில் போட்டியிட்ட வி.விஜய வேணி, என்.ஆர். காங்கிரஸ் சார்பில் திருபுவனை (தனி) தொகுதியில் போட்டியிட்ட கோபிகா, நெடுங்காடு (தனி) தொகுதியில் போட்டியிட்ட சந்திர பிரியங்கா, திமுக சார்பில் காரைக்கால் நிரவி தொகுதியில் போட்டியிட்ட கீதா ஆனந்தன் ஆகிய 4 பெண் வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர்.

கடந்த 2021ல் என்.ஆர். காங்கிரஸில் சந்திரபிரியங்கா மட்டுமே வென்று அமைச்சராகி, பின் நீக்கப்பட்டு எம்எல்ஏவாக இருந்தார். வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் புதுச்சேரியில் திமுக 13 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இதில் ஒரு பெண் வேட்பாளருக்கு கூட அக்கட்சி வாய்ப்பு தரவில்லை. பாஜக 10 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

அந்தக் கட்சியும் பெண் வேட்பாளர்களை நிறுத்தவில்லை. இரு தொகுதிகளில் போட்டியிடும் அதிமுகவும் பெண் வேட்பாளர்கள் யாருக்கும் வாய்ப்பு தரவிலலை. 16 தொகுதிகளில் களம் காணும் என்.ஆர். காங்கிரஸ், முன்னாள் அமைச்சர் சந்திர பிரியங்கா, முன்னாள் எம்எல்ஏ கோபிகா ஆகியோருக்கு இம்முறை போட்டியிட வாய்ப்பளித்துள்ளது.

தங்களுடன் கூட்டணி சேர்ந்திருக்கும் நேயம் மக்கள் கழகத்துக்கு இரு தொகுதிகளை அளித்திருக்கும் தமிழக வெற்றிக் கழகம், மீதம் உள்ள 28 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இக்கட்சி இரு பெண்களுக்கு வாய்ப்பு தந்துள்ளது.

16 தொகுதிகளில் போட்டியிடும் காங்கிரஸ் ஒரு பெண் வேட்பாளருக்கு வாய்ப்பு அளிக்கிறது. ஆனாலும், அக்கட்சி அதை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை.

கூட்டணிக் கட்சிகளின் தொகுதிகளிலேயே தங்கள் தரப்பிலும் மனுத்தாக்கல் செய்து குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கும் காங்கிரஸ், யார் யார் மனுத் தாக்கல் செய்துள்ளனர் என்ற முழு விவரத்தையோ, மனுவை யார் வாபஸ் வாங்கப் போகிறார்கள் என்ற விவரத்தையோ இதுவரையிலும் அளிக்காமல் இழுத்தடித்து வருகிறது.

இறுதிப்பட்டியல் வெளியாகும் போதே காங்கிரஸ் தரப்பில் யார் உள்ளனர் என்பது தெரியவரும். இவர்களுக்கு மத்தியில் நாம் தமிழர் கட்சி, ஏற்கெனவே கூறியிருந்தது போலவே, சரிபாதியாக 50 விழுக்காடு வாய்ப்பை பெண்களுக்கு அளித்துள்ளது.

இக்கட்சி புதுச்சேரியில் மொத்தமுள்ள 30 தொகுதிகளில் 28ல் தனித்துப் போட்டியிடுகிறது. இதில் சரிபாதியாக 14 பெண் வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறது.

## 'சமூக நீதியை பேசினால் மட்டும் போதாது..'

முக்கிய கட்சிகள் பெண்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்காதது பற்றி புதுச்சேரி மக்கள் வாழ்வுரிமை இயக்க செயலர் ஜெகன்நாதன் கூறுகையில், "தேசிய கட்சிகளான பாஜக, சமூக நீதி மற்றும் பெண்கள் உரிமை பற்றி தொடர்ச்சியாக அரசியல் பிரச்சாரம் செய்து வரும் திமுக ஆகிய பிரதான கட்சிகள் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட ஒரு பெண் வேட்பாளருக்கு கூட வாய்ப்பு வழங்காதது கடும் கண்டனத்திற்கு உரியது



# தமிழக சட்டமன்றத் தேர்தல் முன்னிட்டு வண்டலூர் வட்டம் சார்பில் கிரசென்ட் கல்லூரி இணைந்து தேர்தல் விழிப்புணர்வு

## பேரணியை தேர்தல் நடத்தும் அலுவலர் தொடங்கி வைத்தார்

வண்டலூர், மார்ச்.27-

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூரில் தமிழக சட்டமன்ற தேர்தல் முன்னிட்டு வண்டலூர் வட்டம் சார்பில் கிரசென்ட் கல்லூரி இணைந்து தேர்தல் விழிப்புணர்வு பேரணியை, வட்டாட்சியர் ராதா, துணை வட்டாட்சியர் சுகுமாரன் வருவாய் ஆய்வாளர்கள் ரேவதி, சக்திவேல், கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் முன்னிலையில் நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளராக

தேர்தல் நடத்தும் அலுவலர் ரம்யா உடன் கல்லூரி பதிவாளர் ராஜா உசேன், துணைவேந்தர் பீர்முகமது ஆகியோர் கலந்து கொண்டு ஜனநாயக திருவிழாவான தேர்தல் சுதந்திரத்தை புறாவைப் பறக்க விட்டு பேரணிக்கு கொடி அசைத்து தொடங்கி வைத்தார்


இப்பேரணியில் கல்லூரி மாணவர்கள் தங்கள் கரங்களில் தேர்தல் குறித்தான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பதாகைகள் ஏந்தி வண்டலூர் கேளம்பாக்கம் சாலையிலிருந்து திருச்சி தேசிய நெடுஞ்சாலை வழியாக ஊர்வலமாக சென்று பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார் இந்த ஊர்வலத்தின் போது அனைவரும் கட்டாயமாக வாக்கு பதிவு செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த ஊர்வலம் நடைபெற்றது





■ சென்னை திருவேற்காடு மெயின் ரோடு, அயப்பாக்கம் வெல்கம் நகரில், அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பவானி முத்து மாரியம்மன் ஆலய புணராவர்த்தண ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. விசுவா வசு வருடம் பங்குனி மாதம் 11ஆம் நாள் புதன்கிழமை சப்தமிதிதி மிருகசீரிஷம் நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் ரிஷப லக்னத்தில் ஸ்ரீ பவானி முத்து மாரியம்மன் மற்றும் ஏனைய பரிவார தெய்வங்கள் அனைத்து மூர்த்திகளுக்கும், சிறப்பான முறையில் ஆலய நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் சிறப்பான முறையில் கும்பாபிஷேகத்தை நடத்தினர். வருகை தந்த அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.





■ சென்னை ஆவடி கோணம்பேட்டில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய ஜீரணோதாரண நூதன விமான பரிவார மூர்த்திகளுக்கும் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆலய நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் சார்பில் நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில் ஆன்மீக செம்மல் கே. என் சேகர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்பித்தார். வருகை தந்து சாமி தரிசனம் செய்த அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# திமுக கூட்டணிக்கு 'இம்மானுவேல் சேகரனார் மிஷன்' ஆதரவு

சென்னை, மார்ச்,,27-

நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, 'இம்மானுவேல் சேகரனார் மிஷன்' ஆதரவு தெரிவித்துள்ளது.

இது குறித்து திமுக சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில், "ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, ஒட்டப்பாலம் 'இம்மானுவேல் சேகரனார் மிஷனின்' கவுரவத் தலைவரும் தியாகி இம்மானுவேல் சேகரனாரின் முதல் பேரனுமான ரமேஷ் தேவேந்திரர், இன்று காலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதியை நேரில் சந்தித்தார்.

அப்போது அவர், நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் பொதுத் தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாக தெரிவித்தார்.



மேலும், திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற 'இம்மானுவேல் சேகரனார் மிஷன்' நிர்வாகிகள் பாடுபடுவார்கள் என உறுதி அளித்தார்," இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழ.நெடுமாறன் ஆதரவு... இரண்டு நாட்களுக்கு முன்னர், தமிழர் தேசிய முன்னணி நிறுவனத் தலைவர் பழ.நெடுமாறன் திமுகவுக்கு ஆதரவு தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர், "தமிழ் மற்றும் தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராக செயல்படுவது, இந்தி மற்றும் சமஸ்கிருத மொழியை தமிழகத்தில் திணிப்பது, இந்து மதவாதத்தை தூக்கி பிடிப்பது போன்ற நடவடிக் கைகளில் ஈடுபடும் பாஜக, தமிழகத்தில் பல கட்சிகளு டன் கூட்டணி அமைத்துள் ளது.

இந்த பேரபாயத்தை முறியடிக்க வேண்டியது தமிழர்களின் முதன்மையான கடமையாகும். எனவே, பாஜக கூட்டணியை முறியடிக்கும் வகையில், வரும் தேர்தலில் திமுக கூட்டணிக்கு ஆதரவு அளிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது." எனத் தெரிவித்திருந்தது நினைவுகூரத்தக்கது.

# மானாமதுரை தொகுதியில் பாஜக சார்பில் பொன்.பாலகணபதி போட்டியிட வாய்ப்பு?

சிவகங்கை, மார்ச்.,27-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தொகுதியில் அரசியல் சூழல் பரபரப்பாகி வருகிறது. இந்நிலையில் பாஜக சார்பில் போட்டியிட உள்ள வேட்பாளர் குறித்து பல்வேறு தகவல்கள் வெளியாகி வருகின்றன.



மானாமதுரை தொகுதியில் பாஜக சார்பில் பொன்.பாலகணபதி போட்டியிட வாய்ப்பு அதிகம் என கட்சி வட்டாரங்களில் தகவல் பரவி வருகிறது. இதனால் அப்பகுதியில் அரசியல் எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்துள்ளது.

# லஞ்ச ஒழிப்புத் துறையினர் தீவிர சோதனை

வேலூர், மார்ச்.,27-

வேலூர் மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர் (RDMA) நாராயணனுக்கு சொந்தமான இடங்களில் நேற்று லஞ்ச ஒழிப்புத் துறையினர் (DVAC) தீவிர சோதனை நடத்தி வருகின்றனர். இந்த சோதனையின் முக்கிய விவரங்கள்: காரணம்: வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக எழுந்த புகாரின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



சோதனை நடைபெறும் இடங்கள்: வேலூர் காந்தி நகரில் உள்ள அவரது இல்லம் மற்றும் அவருக்குத் தொடர்புடைய பிற இடங்களிலும் அதிகாரிகள் சோதனையிட்டு வருகின்றனர்.

# 'அம்மா' வளர்த்த சேகர்பாபு இப்போது 'அப்பா'வின் அடிமை

## தமிழிசை விமர்சனம்

'சென்னை, மார்ச்,,27-

"அம்மா (ஜெயலலிதா) வளர்த்த சேகர்பாபு அப்பாவிடம் (ஸ்டாலின்) சென்று அடிமையானார்" என பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "அமைச்சர் சேகர்பாபுவுக்கு எங்களைப் பற்றி பேச எந்த தார்மிக உரிமையும் கிடையாது. நான் அப்பா வளர்த்த பிள்ளை, எனக்கு மோடியை பிடிக்கும் என்பதால் தேசியத்தில் தஞ்சமடைந்தேன். அம்மா வளர்த்த சேகர்பாபு 'அப்பா'விடம் சென்று அடிமையானார். அதனால் அவர் என்



தந்தை பற்றியெல்லாம் பேசக்கூடாது. நான் எனது அப்பாவின் கட்சியில் இல்லை, வாரிசு அரசியலை எந்த விதத்திலும் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

நான் பாஜகவில் இணைந்து 27 ஆண்டுகள் ஆகிவிட்டன. அடிப்படை உறுப்பினரில் ஆரம்பித்து மண்டல், மாவட்டம், மாநிலம் மற்றும் தேசியம் என வளர்ந்துள்ளேன்.

எடப்பாடி பழனிசாமி டெல்லிக்கு சென்றால் முதல்வருக்கு பயம் வந்துவிடுகிறது. உங்கள் அமைச்சர்கள் சிலர் போட்டி போடாத முடியாத நிலை இருக்கிறது.

எங்களை (பாஜக) காட்டி திமுக, கூட்டணி கட்சிகளுக்கு ஒரு சீட்டை குறைக்கிறார்கள். எனவே ஸ்டாலினுக்கு நாங்கள் உதவி செய்து கொண்டிருக்கிறோம். விசிக, கம்யூனிஸ்டுகள் அடிமையாக இருக்கிறார்கள். பாஜக உள்ளே வந்துவிடும் என சொல்கிறார்கள். நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாங்கள் உள்ளே வந்துவிட்டோம்" என்று அவர் கூறினார்



# தேமுதிக போட்டியிடும் 10 தொகுதிகள் எவை திமுக குழுவுடன் தேமுதிக பேச்சுவார்த்தை

சென்னை, மார்ச்,,27-

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் திமுக கூட்டணியில் தேமுதிகவுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 10 தொகுதிகள் எவை என்பது தொடர்பாக தேமுதிக குழு, திமுக குழுவுடன் நேற்று முதல் கட்ட பேச்சுவார்த்தை நடத்தியது. இந்த நிலையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று காலை தேமுதிக போட்டியிடும் தொகுதிகள் எவை என்பது தொடர்பாக ஆலோசனை கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் பொதுச்செயலாளர் பிரேமலதா நேரடியாக பங்கேற்று, திமுக குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இதில் தேமுதிக போட்டியிடும் 10 தொகுதிகள் எவை என்பது தொடர்பாக அடையாளம் காணப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. தேமுதிக போட்டியிடும் 10 தொகுதிகள் எவை என்பதை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஓரிரு நாளில் அறிவிப்பார் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161